[1990 சனவரி 23

கூடுதல் மின்சார ரயில் வண்டிகள்.

*1436 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தாம்பரத்திலிருந்து கடற்கரைக்குக் கூடுதலாக மின்சார ரயில் வண்டிகள் விட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரத்திற்குக் கூடுதலாக மின்சார இரயில் வண்டிகள் விட வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டுகளாக இந்தப் பகுதியில் ரயில் சர்வீஸ்களில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. புறநகர்ப் பகுதிகளில் குடியிருப்புகள் பெருகிவிட்ட காரணத்தினாலே, பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து, நெரிசல் அதிகமாகி இருக்கிறது. அதில் பயணம் செய்யும் பெண்கள், குழந்தைகள் நிலைமைகள் சொல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே, இந்தப் பாதைகளில் ஓடுகிற வண்டிகளில், வண்டித் தொடர்களின் நீளத்தை அதிகரிக்கவும், அந்தப் பகுதிகளுக்குக் கூடுதலான மின் வண்டி அலகுகள், ஈ.எம்.யு.க்கள் ஒதுக்கீடு செய்யவும், பெண்கள், குழந்தைகளுக்கு நெரிசல் நேரங்களில் கூடுதலான பெட்டிகள் ஒதுக்கப்படவும் ரெயில்வே துறையை வலியுறுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீட்டர் கேஜ் பிரிவு 1931 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அதற்குப் பிறகு எந்தவிதமான வளர்ச்சியும் இல்லாமல் அதே நிலைமையில் இருந்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்தை மையமாக வைத்து ஏற்கெனவே 1986-வது ஆண்டு தமிழக அரசின் சார்பிலே இந்தக் கருத்துக்களை எல்லாம் வலியுறுத்தி மத்திய அரசு இரயில்வே துறைக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது, ஆனால் இன்றைய வரைக்கும் அதற்குப் பதில் வரவில்லை. மீண்டும் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தி இந்த மீட்டர் கேஜ் பாதையை பிராட்கேஜ்ஜாக மாற்றுவதற்கும் கூடுதலாக ரயில் பெட்டிகள் விடப்பட்டு நெருக்கடியைச் சமாளிப்பதற்கு

1990 சனவரி 23]

வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு நிச்சயமாக வலியுறுத்தி கேட்டுக் கொள்ளும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் கடற்கரை இரயில் பாதைக்குக் குறுக்கே அமைந்திருக்கக் கூடிய சாலை சந்திப்புகளில், லெவல் கிராஸிங்கில் போக்குவரத்தை அனுமதிக்க வேண்டியுள்ளதால் கூடுதல் ரயில் வண்டி விட முடியவில்லை என்று இரயில்வே நிர்வாகம் சொல்கிறது. இதற்கு இந்தச் சந்திப்புகளிலே சுரங்கப் பாதை அல்லது மேம்பாலம் கட்டுவது மிக மிக அவசியம். தாம்பரத்திற்கும் கிண்டிக்கும் இடையே மேம்பாலங்கள் கட்டப்பட இந்த அரசு ரயில்வே துறையை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நிச்சயம் வலியுறுத்தும்.

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழு.

*336 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழுவில் அந்தந்தத் தொகுதி பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளில் உள்ள தனியார் தோட்டங்களிலும் மற்றும் தனியார் காடுகளிலும் மரங்களை வெட்ட அனுமதி அளிக்கும் மாவட்ட குழு, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைப் பகுதி (மரங்கள் பாதுகாப்புச்) சட்டம் 1955 ஆகியவற்றின் பிரிவு 2 (ஏ)-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள காரணத்தால், இக் குழுவில் தொகுதி சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க வழிவகை இல்லை.

9—55 மணி.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் வனத்துறை அதிகாரியும் இன்னும் சில அதிகாரிகள் மட்டுமே இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே, மக்களால்